بسم الله الر حمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஸனாய்யியா, ஜித்தா, சவூதி அரேபியா. இதழ்: 3:5, ஸபர், 1428, பக்கங்கள்-12

P.O.Box-32628, Jeddah-21438, K.S.A, E-Mail : suvanam@gmail.com, ibrahim@dawahoffice.org.sa

## இணையம் - ஒரு கழுகுப் பார்வை

- S. ஹலரத் அலி

(சுவனப்பாதை நடத்திய மாபெரும் எழுத்துலகப் புரட்சிப் போட்டியில் மூன்றாம் ஆறுதல் பரிசு பெற்ற கட்டுரை)

அறியாமை இருளில் மூழ்கியிருந்த மேற்கத்திய நாடுகள் அல்-குர்ஆன் வழிகாட்டுதல் மூலமே அறிவொளி பெற்றதாக வரலாறு கூறுகின்றது. அன்றைய முஸ்லிம்கள் பிற மக்களின் அறிவுக் கண்களை திறந்து வழிகாட்டினர். ஆனால் இன்றைய முஸ்லிம்களில் பலர் கண்ணிருந்தும் குருடராக அறியாமை இருளில் ஆழ்ந்துள்ளனர்.

முஸ்லிம்கள் கல்வி, அறிவு வளர்ச்சியில் முன்னேறிவிடக்கூடாது என்பதில் வல்லரசு நாடுகள் மிக விழிப்பாகவே இருக்கின்றன. 1960-70, 80களில் எண்ணெய் பணம் ஏராளமாக அரபு நாடுகளில் குவிந்து (இன்னும் அப்படியே) அரபு நாடுகளின் ஆலோசகர்களான அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள், எண்ணெய்ப் பணத்தைக் கொண்டு ஏராளமான வளர்ச்சித் திட்டங்களை இங்கு அறிமுகப்படுத்தினர். பாலைவனங்களிலும் நீண்ட சாலைகள், இரவை பகலாக்கும் ஒளி விளக்குகளின் வசதி, அமெரிக்க இறக்குமதி கார்கள் தாராளமாக ஓடுவதற்கு ஏராளமான ஹை-வே பிரிட்ஜ் (மேம்பாலங்கள்) வானுயர்ந்த கட்டிடங்கள் வர்த்தக வளாகங்கள், இவைகள்தான் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அடையாளம் எனக்கூறி கட்டுமானத் திட்டங்கள் மூலம் பணத்தைச் சுரண்டினர். ஆனால் அடிப்படைக் கல்வி, அறிவு வளர்ச்சி, ஆய்வுப்பணிக்கு எந்த ஆலோசனையும் வழங்கவில்லை, அதைப்பற்றி சிந்தனையும் இங்கு இல்லை.

“ஓதுவீராக!” என்ற முதல் வசனம் இறங்கிய நாட்டின் நிலையை சற்று தெரிந்து கொண்டால் முஸ்லிம்கள் முஸ்லிம் சமுதாயத்தின் இன்றைய நிலையை தெரிந்து கொள்ளலாம். தைவான் மிகச் சிறிய நாடு. இங்குள்ள மக்கள்தொகை

(தொடர்ச்சி 7 ஆம் பக்கம் ...)

### உள்ளே

விமானம் ரிவர்ஸில் போகுமா? - 3
இஸ்லாத்திற்கு எதிரான சூழ்ச்சிகள் - 5
மனிதா! நீ எதற்காகப் படைக்கப்பட்டாய்? -8
அல்லாஹ்வின் சாபத்திற்குள்ளானவர்கள் - 7
அல்லாஹ்வின் அதிசயப் படைப்புகள் - 10
புதிய டிரா:.பிக் விதிமுறைகள் - 11
அறிவுப்போட்டி - 12

## ...ஆதலினால் கல்வி பயில்வீர்

- A. பஷீர் அஹமது - கோவை

தொடக்கம் உன் பெயரால்... தொடர்வது உன் அருளால்...

தொலைந்த பொருளை தேடுவது போல் வாழ்க்கையில் கல்வியை தேடிக்கொண்டே இருங்கள் என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

கல்வியின் முக்கியத்துவத்தையும், கற்பதின் அவசியத்தையும் இவ்வளவு சிறப்பாக ரசூலுல்லாஹ்(ஸல்) அவர்களை தவிர வேறு யாராலும் சொல்ல முடியாது அன்பர்களே.

மேலைநாட்டு கல்வியாளர் ஒருவர் அவருடைய பங்கிற்கு கல்விக்கு இவ்வாறு முக்கியத்துவம் தருகிறார் அதாவது

இன்று நீ கல்வி கற்றுக் கொண்டு நாளை கற்பதை நிறுத்திவிட்டால், நாளை மறுநாள் நீ கல்வி கற்காதவனாகி விடுவாய்

If u are educated today, leave education tomorrow, you are uneducated on day after tomorrow

ஆக கல்வி என்பது வாழ்நாள் முழுவதும் நாம் தொடர்ந்து கற்க வேண்டிய ஒன்று என்பது தெளிவாகிறது. ஒரு வரலாற்று நிகழ்வுடன் இந்த கட்டுரையை ஆரம்பிப்பது சாலச் சிறந்ததாகும்.

இஸ்லாமிய வரலாற்றில் மிகப்பெரிய திருப்பத்தை ஏற்படுத்திய பத்ருப் போரின் வெற்றிக்கு பிறகு எழுபதிற்கும் மேற்பட்ட இறை நிராகரிப்பாளர்கள் போர் கைதிகளாக நபி(ஸல்) அவர்கள் முன் நிறுத்தப்பட்டனர் அவர்கள் அனைவரும் நன்கு படித்தவர்கள். அவர்களை பார்த்து இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள், உங்களில் எவர் முஸ்லிம்களுக்கு எழுதவும், படிக்கவும் கற்றுக் கொடுக்கிறார்களோ அவருக்கு நான் விடுதலை அளிப்பேன்.

நபிகள் நாயகம்(ஸல்) அவர்களால் இந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட கல்வியை நபியின் வழித்தோன்றல்களாகிய நாம் எந்த அளவிற்கு பேணிக் காக்கிறோம் என்பதை யோசித்தால் நமக்கு பெருத்த ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது அன்பர்களே!

இங்கு கல்வி என்று குறிப்பிடுவது முதலில் அடிப்படைக் கல்வியான நமது தீன் கல்வி, அதன்பின் ஏட்டுக் கல்வி, அதனைத் தொடர்ந்து நம்மை நாம் மேம்படுத்திக் கொள்ளவும், அறிவைப் பெருக்கிக் கொள்ளவும் தொடர்ந்து நாம் கற்பது ஆகியவற்றையும் உள்ளடக்கியது என்பதை கருத்தில் கொள்ளவும்.

கல்விக்கும் நமது இஸ்லாமிய மக்களுக்கும் உள்ள தொடர்பு தற்பொழுது எந்தளவில் உள்ளது என்பதை கணக்கிட்டால் நிச்சயமாக பூமிக்கும், சூரியனுக்குமுள்ள தூரத்தைவிட அதிகம் என்றே கருதவேண்டியுள்ளது.

அன்பர்களே! இஸ்லாம் கல்வியை ஆதரித்த அளவிற்கு உலகிலுள்ள வேறு எந்த கொள்கையும், கோட்பாடுகளும்

கல்வியை ஆதரிக்கவில்லை என்பதுதான் வரலாறு. இந்த அடிப்படை அதிகாரத்தை நாம் தெளிவாக புரிந்து கொண்டோமா என்பதுதான் நமக்குள் இருக்கும் பெரிய தகராறு.

நாம் எதில் தெளிவாக இருக்கிறோமோ இல்லையோ, சிறுபான்மை சமுதாயத்தினர் என்பதில் மட்டும் மிக மிகத் தெளிவாக இருக்கிறோம். அதனால்தான் நம்மை முன்னிலைப்படுத்தி எந்த ஒரு பிரச்சினை எழுந்தாலும் நாம் ஒரு சிறுபான்மையினர் என்று ஒப்பாரி வைத்தே ஓய்ந்து விடுகிறோம்.

ஆனால் சிறுபான்மையினராகிய நம்மில் ஒரு பகுதியினர் திறமை மற்றும் கல்வி கற்க ஆர்வம் இருந்தும் வசதி இல்லாததால் கல்வி கற்காமல் உள்ளனர் ஒரு பகுதியினர் நல்ல வசதி வாய்ப்புகள் இருந்தும் கல்வி கற்பதில் ஆர்வம் காட்டுவதில்லை, மற்றொரு பகுதியினரோ கல்வியை நன்கு மேம்படுத்திக் கொண்டும் வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொண்டே போய்க் கொண்டும் உள்ளனர்.

நமக்குள் இப்படி ஒரு நிகழ்வு எதனால் ஏற்பட்டது என்பதை நிதானித்தால் நமக்கு ஒற்றுமை உணர்வு குறைவு என்பதைவிட சமுதாய உணர்வு அதிகம் இல்லை என்றே அர்த்தமாகிறது.

நம் சமுதாயத்தில் இருக்கும் இப்படிப்பட்ட குறைப்பாட்டை நிவர்த்தி செய்யவும் இந்த முரண்பாட்டை சமன் செய்யவும் ஒரே வழி கல்வியை எற்றி வைப்பது தான்.

ஆம்! சகோதரர்களே இஸ்லாத்தை எத்தி வைப்பது போல் நம் இஸ்லாமிய மக்களிடையே கல்வியையும் எற்றி வைப்பது அவசியம் என்றே தோன்றுகிறது.

**கல்வி என்பது ஒரு பொதுவுடைமை. அது தனிப்பட்ட ஒரு சமுதாயத்தினருக்கு மட்டும் சமர்பணம் ஆனதல்ல. நம் இஸ்லாமிய சமுதாயத்தினர் மட்டும் கல்வி பயில வேண்டும் என்பது எம்முடைய குறுகிய மனப்பான்மையும் அல்ல ஆனால் ஒப்பிட்டுப் பார்த்தால் மற்ற சமுதாயத்தினரைவிட நம் சமுதாயத்தில் தான் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கையும், கற்பதின் அவசியத்தை புரிந்தவர்களின் எண்ணிக்கையும், அறிவைத் தேடுவதில் நாட்டம் கொண்டவர்களின் எண்ணிக்கையும் மிக மிக குறைவாக உள்ளது**

கல்வி என்பது ஒரு பொதுவுடைமை. அது தனிப்பட்ட ஒரு சமுதாயத்தினருக்கு மட்டும் சமர்பணம் ஆனதல்ல. நம் இஸ்லாமிய சமுதாயத்தினர் மட்டும் கல்வி பயில வேண்டும் என்பது எம்முடைய குறுகிய மனப்பான்மையும் அல்ல ஆனால் ஒப்பிட்டுப் பார்த்தால் மற்ற சமுதாயத்தினரைவிட நம் சமுதாயத்தில் தான் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கையும், கற்பதின் அவசியத்தை புரிந்தவர்களின் எண்ணிக்கையும், அறிவைத் தேடுவதில் நாட்டம் கொண்டவர்களின் எண்ணிக்கையும் மிக மிக குறைவாக உள்ளது என்பதுதான் இக்கட்டுரையின் ஆதங்கமே.

உலகில் இஸ்லாம் பரவத் தொடங்கிய பிறகுதான் கல்வி என்பது எல்லோருக்கும் பொதுவானது என்ற நிலை செயலில் வந்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நமது வாழ்க்கையின் ஆதாரமாகிய திருக்குர்ஆன், கல்வி கற்பதையும் அறிவைத் தேடுவதையும் பற்றி பற்பல அத்தியாயங்களில் நமக்கு அறிவுரை வழங்குகிறது.

கல்வி கற்பதின் மூலமும், அறிவைப் பெருக்கிக் கொள்வதின் மூலமும்தான் விழிப்புணர்ச்சி ஏற்படும். விழிப்புணர்ச்சி அதிகமானால், அறியாமை அகலும். அறியாமை அகன்றால் சமுதாயம் மறுமலர்ச்சி அடையும். சமுதாய உணர்வு உள்ளவர்களிடம் தான் சமுக அக்கறையும் இருக்கும் என்பது நடைமுறை உண்மை.

ஆக கல்வி என்பதும் நமக்கு வலியுறுத்தப்பட்ட ஒரு விஷயம் என்று புரிகிறது. ஆனால் இயன்றவரை அதை நாம் ஏன் கடைப்பிடிப்பதில்லை என்றுதான் புரியாத புதிராக உள்ளது.

கல்வியைப் பொறுத்தவரை நம்மில் ஏன் இப்படி ஒரு தேக்கநிலை என்று யோசித்தால் நம்மில் பல பேர் கல்வி என்பது மனதிற்கு ஒரு இணக்கமான விஷயம்தான் என்பதை புரிந்து கொள்ளாமல் உள்ளனர் என்பதே தெளிவாகிறது.

அறியாமையும், மூடநம்பிக்கையும்தான் அழிவுப் பாதைக்கு வழிக்காட்டும் கலங்கரை விளக்குகள் என்பது நமது அறிவிற்கு தெரிந்தாலும் அதை நமது உள்ளம் ஏற்றுக் கொள்வதில்லை. ஷைத்தான் கெட்டதைத் தான் அழகாக்கிக் காட்டுவான் என்பதும் நமக்கு உறைப்பதில்லை. போதிய விழிப்புணர்ச்சியின்மையும், அலட்சிய குணமும்தான் நம் சமுதாயத்தில் உள்ள பலர் இறைவனுக்கு இணைவைக்கும் இழிவான நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர் என்பதை உணரவும் நாம் முற்படுவதில்லை.

அல்லாஹ்வின் படைப்புகளில் முழுமையான படைப்பு மனித இனம்தான் அந்த மனித இனத்திற்கு பகுத்தறிவு மூலம் சிந்திக்கவும் பொறுப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளான் ஆக அந்த ஏக இறைவனுக்கு நன்றி சொல்வது கடமை என்பதால் கல்வி கற்பது அவசியம் என்பதை முதலில் உணருங்கள்.

கல்வி கற்க வேண்டும் என்று வலியுறுத்தப்படும் போதே அதை தெளிவாகவும் கற்க வேண்டும் என்ற பொருளும் அதில் உள்ளது. தெளிவான கல்விதான் நல்ல சிந்தனைக்கு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. தெளிவான கல்வியின் அவசியத்தை சொல்லும் இவ்வேளையில் ஒன்றை குறிப்பிட்டு சொல்வது கடமை என்றே கருதுகிறேன்.

உலக மக்கள் அனைவருக்கும் ஓர் நல்லுரை என்று அரபி மொழியில் அல்லாஹ்வால் இறக்கி அருளப்பட்ட திருக்குர்ஆனை நம்மில் பலபேர் மூல மொழி அரபியிலேயே படித்திருந்தாலும் அதில் எவ்வளவு பேர் பொருள் உணர்ந்து தெளிவாக கற்றுள்ளனர் என்பதை ஆராய்ந்தால் வெட்கித் தலை குனிய வேண்டியநிலை நமக்கு. பொருள் உணர்ந்து படிக்காததாலும், தெளிவாக புரிந்து கொள்ளாததாலும் தான் குர்ஆனின் கருத்துக்கள் நம்மீது தாக்கத்தை ஏற்படுத்தாமல் உள்ளது (அல்லாஹ் நம்மை மன்னிப்பானாக) ஆதலால்தான், இறைவனுக்கு இணைவைக்கும் காரியங்களுக்கு துணை போகிறோம். மார்க்க வழியை மனம் போன போக்கில் பின்பற்றுகிறோம்.

சகோதரர்களே நம்மில் பலருக்கு கல்வி கற்று என்ன பயன், இஸ்லாமியருக்கு வேலை வாய்ப்புகள் மறுக்கப்படுகிறது, நமது திறமைகள் அங்கீகாரம் ஆவதில்லை என்று பலவிதமான ஆதங்கமும், மனக்குறைபாடுகளும் உள்ளது இதை மறுப்பதற்கில்லை எனினும் இவையே காரணங்களாக்கிக் கொண்டு நமது திறமைகளை முடக்கிக்

கொண்டும் நம்மை கேலிப்பொருளாக மற்றவர்களுக்கு காண்பித்துக் கொண்டிருப்பதிலும் என்ன நன்மை கண்டோம் இதுவரையில்?

கல்வியின் நிலை குறித்து இப்படி ஆதங்கப்படும் அதே வேளையில் குறைந்த அளவு ஆறுதலும், சந்தோஷமும் அடையும் வண்ணம் சில நல்ல காரியங்கள் தமிழ்நாட்டில் சில இடங்களில் ரெசிடென்சியல் பள்ளிகளில் நடைமுறைபடுத்தப்பட்டு வருகின்றது. இந்த பள்ளிகளில் நமது தீன் கல்வியோடு உலகக் கல்வியும் நல்ல முறையில் போதித்து வருகிறார்கள் அத்துடன் படிப்பைச் சார்ந்த மற்ற துறைகளுக்கு பயிற்சியும் உடல்நலம் பேணுவதற்கு தனி பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றது. சகோதரர்களே! இது ஓர் ஆரோக்கியமான முன்னேற்றம். இந்த ஒரு சில பள்ளிகள் அல்லாஹ்வின் ரஹ்மத்தால் கூடிய விரைவில் பல பள்ளிகள் ஆக வேண்டும் என்பது நம் அனைவருடைய ஆசையாக இருக்கட்டும் அதற்கு நம்மால் இயன்றளவு என்ன செய்யலாம் என்பதையும் சற்று சிந்தியுங்கள். அப்படி சிந்திக்கும் வேளையில் கல்வியின் மகத்துவத்தை மற்றவர்களுக்கு புரிய வைக்கவும் கல்வி வளரவும் ஏதேனும் ஒரு விதத்தில் கல்விற்கு உதவி புரிய முனைந்திருங்கள்.

கல்வி கற்பதற்குண்டான ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். கற்றுக் கொள்வதில் மட்டும் எப்பொழுதும் தாமதம் செய்யாதீர்கள். கல்விக்காகவும் கல்வியைப் பற்றி சிந்திக்கவும், படிக்கவும் தினந்தோறும் குறைந்த நேரமாவது ஒதுக்குங்கள்.

நாம் செய்யும் ஒரு சிறு நன்மைக்கு அல்லாஹ் நமக்கு பல மடங்கு கூலி கொடுப்பான் என்பதை எப்போதும் நினைவில் நிறுத்துங்கள்.

நல்ல கண்ணோட்டமும், தெளிவான சிந்தனையும், முற்போக்கு எண்ணமும் இல்லாத காரணத்தால் தான் பல துன்பங்களும் இழிவான செயல்களும் அரங்கேற ஏதுவாக உள்ளது என்பதை வெளிப்படையாக உணருங்கள். வாழ்க்கையின் தத்துவமே படிப்படியாக முன்னேறுவதுதான் என்கிற கொள்கையில் உறுதியாக இருங்கள்.

அறிவு ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரை காணாமல் போய்விட்ட சொத்து அது எங்கே காணக்கிடைத்தாலும் அவரே அதற்கு உரியவர் ஆவார் என்று இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் சொல்லுகிணங்க அறிவைத் தேடி நாம் அலைவோம்.

அறியாமை என்னும் இருள் அகன்று விழிப்புணர்ச்சி எனும் வெளிச்சம் பரவ குறைந்த பட்சமாக ஒரு மெழுகுவர்த்தி அளவேனும் கல்விக்காக உதவி புரிந்திட முன்வாருங்கள்

..ஆதலினால் கல்வி பயில்வீர்... எல்லா புகழும் இறைவனுக்கே!

## திருக்குர்ஆனை ஓதுவோம்!

**ஜித்தா வாழ் தமிழ்ச் சகோதரர்களுக்கு ஓர் அறிய வாய்ப்பு!**

**திருக்குர்ஆனை ஓதத் தெரிந்தவர்கள் அதற்குரிய தஜ்வீத் சட்டங்களுடன் அழகிய முறையில் ஓதிட, திருக்குர்ஆன் வகுப்பில் கலந்து கொண்டு பயனடையுங்கள்.**

**இடம் : ஸனாய்யியா இஸ்லாமிக் சென்டர் (புதிய கட்டிடம்)**
**நேரம் : வாரந்தோறும், வெள்ளிக் கிழமை ஜும்ஆவிற்குப் பிறகு..**



# விமானம் ரிவர்ஸில் போகுமா?

*- இறைநேசன்*

விமானம் ரிவர்ஸில் போகுமா என்கிற கேள்விக்கு ஒரே வரியில் பதில் சொல்ல வேண்டுமானால் விமானங்களுக்கு ரிவர்ஸ் கியர் கிடையாது என்பதுதான். இதனை கொஞ்சம் விரிவாகப் பார்க்கலாம்.

விமானங்கள் தமது சொந்த சக்தியில் முன்னே செல்ல முடியுமே தவிர பின்னால் செல்ல முடியாது. அதனால்தான் விமான நிலையங்களில் பயணிகளும், சரக்குகளும் ஏற்றப்பட்ட நிலையில் ஓடுதளத்திற்கு செல்ல கட்டி இழுத்து செல்லும் வண்டி (tow trucks) எனப்படும் ட்ராக்ட்டர்கள் தேவைப்படுகின்றன. இந்த ட்ராக்ட்டர்களினால் பின் தள்ளப்பட்டு மெதுவாக திரும்பி செல்ல வேண்டிய திசையை நோக்கி விமானங்கள் நின்ற பிறகு இந்த ட்ராக்ட்டர்களில் இருந்து விடுபட்டு, தனது உந்து சக்தியால் ஓடுதளத்தில் ஓடி, அதன் பின் மேலெழும்பி வானில் பறந்து செல்கின்றன. அவ்வாறு மேலே செல்லும் போது தரையிலிருந்து பார்க்கக்கூடிய நமக்கு விமானங்களிலிருந்து புகை வருவது போல தோன்றுவதற்கு காரணம் விமானத்தில் இருந்து வரும் காற்றில் நீராவி நிறைந்து இருப்பது தான். 30,000 அடி உயரத்தில் உறைநிலை வெப்பம் இருப்பதால் நீராவி உடனே உறைந்து பனிக்கட்டியாகி விடுகிறது. இதுவே நம் கண்களுக்கு புகை போன்று தோன்றுகிறது.

இங்கு விமானங்களில் பொருத்தப்பட்டிருக்கும் என்ஜின்களைப் பற்றி கொஞ்சம் அறிய வேண்டியிருக்கிறது. விமானத்தில் நிரப்பப்பட்டிருக்கும் எரிபொருள் எரிக்கப்பட்டு வாயுவாக மாற்றப்படுகிறது, இவ்வாயு மிகுந்த அழுத்தமான நிலையில் வைக்கப்படுகிறது, இவ்வாறு வைக்கப்பட்டிருக்கும் அறையிலிருந்து ஒரு சிறிய துளை மூலம் இந்த வாயு வெளிப்படுத்தப்படும் பொழுது அவ்வழுத்தத்தினால் ஏற்படும் உந்து சக்தியால் இவ்வாயு வெளிப்படும் திசைக்கு எதிர் திசையில் விமானம் தள்ளப்படுகிறது. இச்சக்தியை ஆங்கிலத்தில் Thrust என அழைக்கிறார்கள். ஒரு பலூனை ஊதி அதன் வாயைக் கட்டாமல் விட்டால் அதிலிருந்து காற்று வெளியாகும் வரை எப்படி பறந்து செல்கிறதோ அது போன்றுதான்.

உதாரணமாக, நம் முகத்தின் நேராக உள்ளங்கையை குழிவாக வைத்துக் கொண்டு ஊதினால், அவ்வாறு வெளியேறும் காற்று, மீண்டும் நம் முகத்தை நோக்கியே வருகிறது அல்லவா? அதே போன்று விமானங்களில் ஒரு அமைப்பு இருக்கின்றது. அதனை Reverse Thrusters என அழைக்கிறார்கள். நம் கை காற்றை மீண்டும் நம் முகத்திற்கே திருப்புவது போல், இந்த அமைப்பு எஞ்சினிலிருந்து வெளியேறும் வாயுவை அது பொதுவாக வெளியேறும் திசைக்கு எதிர் திசைக்கு தள்ளிவிடுகிறது. அதனால் விமானம் முன்னே செல்வதற்குப் பதிலாக அதன் வேகத்தைக் குறைக்க இலகுவாகிறது.

பொதுவாக விமானம் தரையிறங்கி ஓடுதளத்தில் விரைவாக ஓடும் பொழுது இந்த ரிவர்ஸ் த்ரஸ்டர்களை உபயோகித்து

விமானத்தின் வேகத்தை வெகுவிரைவில் குறைப்பார்கள். ஒரு விஷயம் ஞாபகத்தில் இருக்கட்டும். இங்கு ரிவர்ஸ் த்ரஸ்டர்களை உபயோகிக்கும் போது ப்ரேக் பிடிப்பது போல் இஞ்சின் வேகத்தைக் குறைக்காமல், வேகத்தை அதிகப்படுத்தத்தான் செய்வார்கள். இதன் மூலம்தான் தரையிறங்கிய விமானத்தை அவ்வளவு விரைவாக ஓடுதளத்தில் ஓட ஆரம்பித்தாலும் மிகச் சிறிய தூரமே ஓடிய பின் நிறுத்த முடிகிறது. இவ்வசதி இல்லாவிட்டால், ஓடுதளங்களின் நீளம் இன்று இருப்பதைவிட பல மடங்கு நீளமாகத் தேவைப்படும்.

விமானம் இறங்கும்போது, இறக்கைப் பகுதிக்கு அருகே அமர்ந்து இருந்தால், அதில் உள்ள பிளேடு போன்ற தகடுகள் வெளியே (Slide) வருவதை கவனிக்க முடியும். மேலும் அவ்வாறு தரையிறங்கும் போது இஞ்சினை நிறுத்தமாட்டார்கள். பொதுவாக தரையிறங்கி விமான நிலைய கேட் வரை சென்றபின் தான் இஞ்சினை நிறுத்துவார்கள். ஆனால் இறங்கும் பொழுதும், ஓடுதளத்தில் ஓடும் பொழுதும் வேகம் குறைக்க வேண்டும் என்பதால் முழு சக்தியில் இயக்கப்படுவதில்லை. சில சமயத்தில், பழுது காரணமாக இஞ்சின் வேலை செய்யாமல், பைலட்டின் திறமையால் தரையிறக்கப்பட்ட சம்பவங்கள் உண்டு. ஆனால் அவை அவசர தரையிறக்கங்களாகவே கருதப்படுகின்றன. மேலும், விமானத்தின் சக்கரங்கள் எந்திரத்தால் இயக்கப்படுவதில்லை. விமானத்தின் எந்திரங்கள் காற்றை உள்ளிழுத்து வெற்றிடத்தை ஏற்படுத்தியோ அல்லது காற்றை வெளியே தள்ளி விசையை ஏற்படுத்தியோ விமானத்தை முன்னே தள்ளுகின்றன. இவ்வாறு முன்னே தள்ளப்படும் விமானங்களின் சக்கரங்கள் சுழல்கின்றன. எனவே சக்கரங்களை மற்ற வாகனங்களில் உள்ளது போல் கட்டுப்படுத்த இயலாது.




ரிவர்ஸ் த்ரஸ்டர்கள் மூலம் விமானங்களை பின்னால் செல்ல வைக்க முடியவே முடியாதா என்றால் நிச்சயமாக முடியும். இவ்வாறு செய்யாததிற்கு இரண்டு முக்கியமான காரணங்கள் உள்ளன.

முதலாவது காரணம்: பணம்! ஆமாம். விமானங்களின் இஞ்சின்களை இயக்கி அதன் மூலம் விமானத்தை பின் செல்ல வைப்பதை விட ஒரு ட்ராக்ட்டரின் மூலம் பின்னால் தள்ளுவதினால் செலவு குறைகிறது. விமான எரிபொருட்களின் விலையும், எஞ்சின்களின் தேய்மானமும் ட்ராக்ட்டரின் செலவை விட பலமடங்கு அதிகமாகிவிடும். எனவே டெக்னிக்கலாக விமானங்கள் தனது சொந்த உந்து விசையால் பின்னால் செல்ல முடிந்தால்கூட அது எங்கும் செய்யப்படுவதில்லை.

இரண்டாவது காரணம்: விமானங்களில் பிரயாணிகளும், சரக்குகளும் ஏற்றப்படும் பொழுது விமானங்கள் விமான நிலையத்தைப் பார்த்தவாறு நிறுத்தப்படுகின்றன. இப்பொழுது ரிவர்ஸ் த்ரஸ்டர்கள் உபயோகிக்கப்பட்டால் இஞ்சினில் இருந்து வெளியேற்றப்படும் வாயுவானது அதிவேகத்தில் விமான நிலையத்தை நோக்கித்தான் வரும். அதனால் விமான நிலைய கட்டடங்கள் பாதிப்படையும், கண்ணாடி ஜன்னல்கள் உடைந்து விடும். அதனால்தான் ட்ராக்ட்டர்களை உபயோகிக்கிறார்கள்.

இந்த டிராக்டர் மூலமாக விமானத்தை இரண்டு வகையில் பின்னே தள்ளுகின்றார்கள்.

முதல் வகை - Walkout. இதில் டிராக்ட்டர் ஓட்டுநரைத் தவிர கூட ஒருவர் நடந்து வருவார். (Walkout Assistant). இவர் வேலை பின்னால் “வரலாம் வா” என்று கூறுவதுதான். இவர்தான் காக்பிட்டில் இருக்கும் காப்டனுடனும், டிராக்ட்டர் ஓட்டுனருடனும் பேசி சரியான தகவல்கள் கொடுத்து உதவுவார்.

இரண்டாம் வகை - SMPB எனப்படும் Single Man Push Back. இதில் டிராக்ட்டர் ஓட்டுனரே வாக்அவுட் அசிஸ்டண்டின் வேலையையும் பார்த்துக் கொள்வார். இவ்வளவு பெரிய விமானத்தை இந்த டிராக்டர்கள் பின்னே தள்ள முடியுமா என்கிற கேள்வி நமக்கு எழக்கூடும். பயணிகளையும் சேர்த்து முழுதாக சரக்கேற்றப்பட்ட விமானங்களை அந்த டிராக்ட்டர்களால் தள்ள முடியும். அதற்கு தேவையான அளவு குதிரைசக்தி கொண்ட இஞ்சின்களை கொண்டவை. இவைகள் விமானங்களைப் பின்னால் தள்ளும்பொழுது விமானங்களின் இஞ்சின்கள் இயக்கப்பட மாட்டாது.

விமானத்தில் பயன்படுத்தப்படும் எரிப்பொருள் நம் வீட்டில் உபயோகப்படுத்திற மண்ணெண்னை வகையைச் சார்ந்ததுதான். ஆனால் நன்றாக சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய். இதற்கு டெக்னிக்கல் பெயர் Aviation Turbine Fuel (ATF). நாம் கார்களுக்கு பயன்படுத்தும் பெட்ரோலை விமானத்தின் எரிபொருள்களாக பயன்படுத்துவதில்லை. பெட்ரோலை விமானங்களுக்கு எரிபொருளாக உபயோகப்படுத்தி, விமானம் மேலே சென்றால் விமானம் வெடித்து சிதறிவிடும்! ஏனென்றால் இந்த பெட்ரோல் மிகவும் இலேசான பொருள். இதன் டெக்னிகல் பெயர் ‘Motor Spirit’. அதனுடைய ‘Vapor cloud’ விமானம் மேலே செல்லும் பொழுது, ஏற்படும் உராய்வால் தீப்பிடித்துவிடும், இதனால்தான் கொஞ்சம் கனமான பொருளான மண்ணெண்ணையை உபயோகப்படுத்துகிறார்கள். மண்ணெண்னை மேலே உள்ள தட்பவெப்ப நிலையில் உறையாது. பெட்ரோல் உறைந்து கட்டியாகிவிடும் என்பதும் ஒரு காரணம்.●

## வாசகர்கள்! – கருத்து!

**அன்பிற்கினிய “சுவனப்பாதை” வாசகர்களே!!!**
**“சுவனப்பாதை” மாதஇதழில் வெளிவரும் கட்டுரைகள், தொடர்கள், செய்திகள் மற்றும் போட்டிகள் குறித்த உங்கள் மேலான கருத்துக்கள், எண்ணங்கள், என எதுவாகினும் எங்களுக்கு எழுத்து மூலம் கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தெரிவிக்கலாம்.**

**Mr. K.L.M. Ibrahim(Madani), Tamil Division,**
**P.O.Box-32628, Jeddah-21438**
**E-mail : suvanam@gmail.com**
**ibrahim@dawahoffice.org.sa**

# இஸ்லாமியருக்கெதிரான இந்துத்துவ சூழ்ச்சிகள்! பாகம் – 4

கடந்த இதழின் தொடர்ச்சி...

***(-இப்னு பஷீர்)***

## தீவிரவாதத்திற்கான தீர்வு!

இஸ்லாத்தை தவறாக விளங்கிக் கொண்ட சில முஸ்லிம்கள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவது இஸ்லாத்தின் மீதே களங்கம் சுமத்தப் படுவதற்கு காரணமாக அமைகிறது என்பது கசப்பான ஒரு உண்மையே! அவர்களின் செயல்களுக்கு இஸ்லாம் மார்க்கமோ பிற முஸ்லிம்களோ எவ்விதத்திலும் பொறுப்பாக மாட்டார்கள் என்றாலும், அவ்வாறு தவறான வழியில் செல்பவர்களை நேர்வழிப் படுத்தும் பொறுப்பு முஸ்லிம் சமுதாயத்திற்கு இருக்கிறதா, இல்லையா? இந்தப் பொறுப்பை அவர்கள் எவ்வழியில் நிறைவேற்ற இயலும்?

உலகெங்கிலும் உள்ள முஸ்லிம் சமுதாயத்தவர் எதிர்நோக்கும் கேள்விதான் இது! இக்கேள்விக்கு விடை காண முற்படுமுன், இப்பிரச்னையின் மூல காரணிகளையும் அவற்றின் பிண்ணனியைப் பற்றியும் சிறிது ஞாபகப் படுத்திக் கொள்வது அவசியமாகிறது.

2001 செப்டம்பர் 11-க்கு முன் ஒசாமா பின்லேடன் என்ற சவுதி அரேபியரைப் பற்றி உலக முஸ்லிம்களிலேயே பெரும்பான்மையினர் அறிந்திருக்கவில்லை. தாக்குதல் நடந்த சில மணி நேரங்களிலேயே இவரைக் குறிப்பிட்டு அமெரிக்கா குற்றம் சுமத்தியபோதுதான் இவரது பெயரை முழு உலகமும் அறிந்தது. அவரை ஒரு பயங்கரவாதியாக உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தது. அதன் பிறகு நடந்ததும் நடந்து கொண்டிருப்பதும்தான் உலக முஸ்லிம் சமுதாயத்தின் மீது இழைக்கப்பட்ட மாபெரும் அநீதியாக இருக்கும். செப்-11 தாக்குதலுக்கு முன்பு வரை பெரும்பான்மை முஸ்லிம்களால் யாரென்றே அறியப்பட்டிராத ஒசாமா, ஏதோ உலக முஸ்லிம்களின் தலைவர் போலவும், அவர்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற பிரதிநிதி போலவும், உலக முஸ்லிம்கள் அனைவரின் நலனை பாதுகாப்பதற்காகவே அவர் இந்த தாக்குதலை நடத்தியது போலவும் ஊடகங்களில் சித்தரிக்கப் பட்டார்.

**..இந்த நிகழ்வுகளால் உலகெங்கிலும் அப்பாவி முஸ்லிம்கள் அல்லல் படுவது ஒருபுறமிருக்க, முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் சிறிதும் பெரிதுமாக தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதையும் யாரும் மறுக்கவியலாது. சரி, இதற்கு தீர்வுதான் என்ன?**

அந்தத் தாக்குதல், அமெரிக்காவின் முந்தைய அரசியல் செயல்பாடுகளின் பின்விளைவுதான் என்ற உண்மை மறைக்கப்பட்டு, ‘இஸ்லாமிய தீவிரவாதம்’ என்ற சொல்லாடலின் மூலம் அனைத்திற்கும் காரணம் இஸ்லாம் தான் என்ற மாயை உருவாக்கப் பட்டது. உலகெங்கிலும் முஸ்லிம்கள் சந்தேகக்கண் கொண்டு பார்க்கப் பட்டனர். முஸ்லிம்கள் மீதான தேவையற்ற அச்சமும், வெறுப்புணர்வும், துவேஷமும் இஸ்லாமிய எதிர்ப்பாளர்களால் தூபமிட்டு வளர்க்கப் பட்டன. ஊடகங்களும் இதற்கு பெருமளவில் துணை புரிந்தன. யார் யாருடைய சதிச் செயலுக்காகவோ இஸ்லாம் மார்க்கமும் உலக முஸ்லிம் சமுதாயமும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப் பட்டனர்.

இந்த நிகழ்வுகளால் உலகெங்கிலும் அப்பாவி முஸ்லிம்கள் அல்லல் படுவது ஒருபுறமிருக்க, முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் சிறிதும் பெரிதுமாக தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதையும் யாரும் மறுக்கவியலாது. சரி, இதற்கு தீர்வுதான் என்ன?

மிகச் சிக்கலாக வளர்ந்துவிட்ட இந்தப் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது அவ்வளவு எளிதானதல்ல. தவிர, சிலர் எண்ணுவது போல இதற்கு தீர்வு காணும் பொறுப்பு இஸ்லாமிய சமுதாயத்திற்கு மட்டுமே உள்ள கடமையும் அல்ல. பல தரப்பினரின் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சியால் மட்டுமே இதை சாதிக்க முடியும். வன்முறைச் செயல்களுக்கு ‘இஸ்லாமிய தீவிரவாதம்’ எனப் பெயர் சூட்டி, பிரச்சினைகளுக்கான பழியை இஸ்லாம் மீது தூக்கிப் போடுவது எந்த வித தீர்வையும் தராது என்பதோடு, அத்தகைய அணுகுமுறை மேலும் எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். பிரச்சினைகளுக்கு மதச்சாயம் பூசுவதை நிறுத்தி அவற்றின் உண்மைக் காரணங்களை பாரபட்சமின்றி அலசி ஆராய்ந்து தீர்வு காண முயலுவதே சரியான அணுகுமுறையாக இருக்கும்.

வித்தியாசமானதொரு அணுகுமுறையைக் கையாண்டு எமன் நாடு தீவிரவாதத்தை ஒடுக்குவதில் வெற்றி பெற்றுள்ளது . ஒசாமா பின்லாடனின் மூதாதையர்களின் நாடான இது, பல ஆண்டுகளாகவே தீவிரவாதத்தின் மற்றொரு பெயராக இருந்தது. தீவிரவாதிகளின் தலைமையகமாக இந்நாடு உருவாகக் கூடிய அறிகுறிகள் இருந்தன. ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது.

நீதிபதி ஹிதார் என்பவரது தலைமையில் இஸ்லாமிய அறிஞர்களைக் கொண்ட ஒரு குழு, தீவிரவாத செயல்களில் பங்கு பெற்று சிறையிலிருந்த இளைஞர்களை சந்தித்தது. “உங்கள் கொள்கைகளுக்கும் செயல்பாடுகளுக்கும் குர்ஆனிலிருந்து நீங்கள் ஆதாரம் காட்டுவீர்களெனில், உங்களது போராட்டத்தில் நாங்களும் கலந்து கொள்கிறோம். அப்படி இல்லையெனில், நாங்கள் முன்வைக்கும் கருத்துக்களை நாங்கள் ஆதாரபூர்வமாக நிரூபித்து விட்டால், நீங்கள் அனைவரும் வன்முறையை விட்டொழித்து விட வேண்டும்” என ஒரு ஒப்பந்தம் வைத்துக் கொண்டு, அவர்களுடன் பேச்சு வார்த்தையை தொடங்கியது இக்குழு.

இரண்டு வருடங்கள் கழித்து, இரு தரப்பினருக்குமே வெற்றி கிடைத்தது. ஆம்.. நீதிபதி ஹிதார் குழுவினர் முன்வைத்த கருத்துக்களை ஒப்புக் கொண்டதன் வாயிலாக 364 இளைஞர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப் பட்டு நேர்வழிக்கு திரும்பினர். “டிசம்பர் 2002-க்கு பிறகு இங்கு எந்த தீவிரவாத சம்பவங்களும் நடக்கவில்லை.” என்கிறார் நீதிபதி ஹிதார். இவர்களில் யாருமே சண்டையிடுவதற்காக வெளிநாடுகளுக்கும் செல்லவில்லை என்றும் அவர் அறிவிக்கிறார்.

எமன் நாட்டின் இந்த அணுகுமுறையில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், மார்க்கம் குறித்த தவறான புரிதல்கள் மற்றும் தவறான வழிகாட்டுதல்களால் வன்முறைப் பாதையில் பயணிக்கும் இளைஞர்களை, பொறுப்புணர்வுள்ள மார்க்க அறிஞர்கள் இஸ்லாமிய வழிகாட்டுதல்களை கொண்டு நேர்வழிக்கு திருப்பிவிட முடியும் என்பதுதான்.

இந்தியா போன்ற நாடுகளிலுள்ள முஸ்லிம்கள், தம் இளைய சமுதாயத்தினரின் மனதில் தீவிரவாத எண்ணங்கள்

தலைதூக்காமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கான சூழலை உருவாக்கித்தர வேண்டிய பொறுப்பு அந்தந்த நாட்டு பெரும்பான்மை சமுதாயத்தினருக்கு இருக்கிறது.

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளைஞன் தீய செயல்களில் ஈடுபடுகிறான் என்றால் அவனைத் திருத்தும் நடவடிக்கைகளில் அந்தக் குடும்பத்தினருக்கு அவர்களின் அக்கம்பக்கத்தவரும் உதவ வேண்டும். மாறாக, அந்த ஊர்க்காரர்கள் ஒன்று சேர்ந்து, அந்த இளைஞனின் செயல்களுக்காக அவனது குடும்பம் முழுவதையும் குற்றம் சுமத்தி அவர்களை ஊரை விட்டு ஒதுக்கி வைத்தார்கள் என்றால் பிரச்சினைக்கு எந்த வித தீர்வும் ஏற்படாது. இக்குடும்பத்தினர் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக போராட முற்படுவார்களேயல்லாது, தம் குடும்பத்து இளைஞனை நேர்வழிப்படுத்துவதில் அவர்கள் கவனம் செலுத்த இயலாமல் போகும்.

சிறுபான்மை முஸ்லிம்கள் தம் சமுதாய இளைஞர்களில் சிலர் தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுவதை தடுத்து அவர்களை நேர்வழிக்கு கொண்டு வரும் முயற்சியில் பெரும்பான்மைச் சமுதாயம் தமது முழு ஒத்துழைப்பையும் நல்க வேண்டும். நல்லிணக்கத்திற்கு இடையூறு விளைவிக்கும் பிரிவினை சக்திகள் அடையாளம் காணப்பட்டு கண்டிக்கப்பட வேண்டும். பெரும்பான்மையினரின் புரிந்துணர்வுடனான பங்களிப்பு இருந்தால் மட்டுமே முஸ்லிம் சமுதாயம் தமது பங்கை சரிவர நிறைவேற்ற முடியும்.

இத்தகைய நல்லிணக்கமான சூழலை உருவாக்குவதில், அரசாங்கத்தின் பங்கும் இன்றியமையாதது. அரசாங்கம் இதில் எவ்வாறு பங்காற்றலாம் என்பதற்கு, முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு அன்றைய மத்தியப் பிரதேச முதல்வர் ரவிசங்கர் சுக்லாவிற்கு 20 மார்ச் 1954-ல் எழுதிய இக்கடிதம் விளக்கமளிக்கிறது.

என் அன்பான சுக்லாஜி,

மத்தியப் பிரதேசத்திலுள்ள முஸ்லிம்களின் நடவடிக்கைகள் குறித்து நீங்கள் எழுதியுள்ள ஜனவரி 27 தேதியிட்ட கடிதம் கிடைத்தது. உடனடியாக பதில் எழுதாமைக்கு வருந்துகிறேன்.

இந்திய முஸ்லிம்கள் மத்தியில் பல்வேறு விதமான போக்குகள் இருக்கின்றன. அவற்றில் சில கண்டிக்கத் தக்கவையாக இருக்கும் என்பதில் ஐய்யமில்லை. எனினும் இவற்றை மட்டும் வைத்துக் கொண்டு நாம் எந்த முடிவிற்கும் வந்து விட முடியாது என நான் நினைக்கிறேன். பலதரப்பட்ட சூழல்களையும் நாம் மிகவும் புறவயமாக மதிப்பிடுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் பொதுவில் மகிழ்ச்சியற்றும் திருப்தியற்றும் இருக்கிறார்கள் என்றால் தவறு நம் தரப்பில்தானே ஒழிய அவர்கள் தரப்பில் இல்லை. எந்த ஒரு பெருங்குழுவிற்கும் இது பொருந்தும். நாட்டுப் பிரிவினையாலும் அதன் பின்விளைவுகளாலும் இந்திய முஸ்லிம்கள் மிகப்பெரிய அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர்.

இந்தியாதான் அவர்களின் சொந்த நாடு, அவர்களின் நலன்கள் இங்குதான் உள்ளன என்கிற உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்துவது முழுக்க முழுக்க நமது பொறுப்பு. அதை நாம் செய்யத் தவறும்போது, முஸ்லிம்கள் அவர்களின் தலைவர்கள் சிலரால் தவறாக வழி நடத்திச் செல்லப்படுகிறார்கள் என நாம் சொல்வதில் அர்த்தம் இல்லை.

இந்திய முஸ்லிம்களின் சிந்தனையில் ஒரு குறிப்பிடத்தக்க அளவிற்கு விரக்தி குடிகொண்டுள்ளது என்பது உண்மைதான். பாகிஸ்தானுக்கு ஆதரவாக இருப்பவர்களைப் பற்றி நான் பேசவில்லை. அவ்வாறு நிறையப் பேரும் இல்லை. ஆனால் பல்வேறு வழிகளில் முஸ்லிம்கள் மீது அழுத்தம் தொடர்ந்து ஏற்படுகிற மாதிரியான சூழல் இங்கு உருவாகியுள்ளது. அகில இந்திய அளவிலும், மாநிலங்களிலும் அரசுப் பணிகளில் முஸ்லிம்களுக்கு போதிய இடமளிப்பது குறித்த பிரச்சினை உள்ளது. கல்லூரிகள் மற்றும் இதர கல்வி நிறுவனங்களில் இடம் பெறுவது குறித்த பிரச்சினை கூட உள்ளது. வணிகம் செய்வதிலும் அவர்களுக்கு பல பிரச்சினைகள் உள்ளன. எனவே எதிர்காலம் குறித்த பாதுகாப்பின்மையை அவர்கள் உணர்வதில் வியப்பில்லை.

உருது மொழி குறித்த முஸ்லிம்களின் கோரிக்கை பற்றியும் உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தீர்கள். இது மிகவும் முக்கியமான விஷயம். வேறெதையும் விட முஸ்லிம்களை உளவியல் ரீதியில் பாதிக்கக் கூடிய விஷயம். நமது கல்விக் கொள்கையின்படி உருது மொழியைக் கற்றுக் கொள்வதற்கான முழு வாய்ப்புகளையும் நாம் ஏற்படுத்தித் தரவேண்டும். இப்படிச் செய்வது இந்தி மொழிக்கு எதிரானது அல்ல. தேசிய மொழி என்கிற வகையில் இந்திக்கு உறுதியான இடம் கொடுக்கப் பட்டுள்ளது. நமது நடைமுறைக் கொள்கை நாம் அறிவித்துள்ள கல்விக் கொள்கையுடன் பொருந்தாமலிருப்பதன் விளைவுதான் முஸ்லிம்கள் மனதில் ஆழமான விரக்தியுணர்வை ஏற்படுத்தியிருக்குமோ என நான் அஞ்சுகிறேன். இந்த நாட்டு மக்களில் முஸ்லிம்கள் ஒரு பெருந்தொகையினர் என்பதையும், அவர்களின் நல்லெண்ணத்தை நாம் எவ்வாறு பெறுவது என்பது ஒரு பெரிய பிரச்சினை என்பதையும் நாம் மறந்து விட்டது போலத் தோன்றுகிறது. பெரிய அளவில் காஷ்மீர் பிரச்சினை இந்தியாவிலுள்ள முஸ்லிம்களின் எதிர்வினையைப் பொறுத்துள்ளது.

கிழக்கு பாகிஸ்தானில் சமீபத்தில் நடைபெற்றுள்ள தேர்தல் ஒரு புதிய சூழலைப் பாகிஸ்தானில் ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையில் உறவுகள் மேம்படுவதற்கு வழிவகுப்பதாக அது உள்ளது. பாகிஸ்தான் மக்களின் பொதுவான உணர்வுகள் இந்தியாவுடன் நட்பு பாராட்டுவதாகவே உள்ளன. இந்தியாவில் உள்ள முஸ்லிம் குடிமக்களை நாம் எவ்வாறு கையாளுகிறோம் என்பதைப் பொறுத்தே எல்லாம் உள்ளது.

உங்கள் உண்மையுள்ள

ஜவஹர்லால் நேரு

(நன்றி: 'நான் புரிந்து கொண்ட நபிகள்' - அ. மார்க்ஸ்)

தீவிரவாதம் மதங்களை கடந்த ஒரு உலகளாவிய பிரச்சினை என்பதை கவனத்தில் கொண்டு, அதை ஒழிப்பதில் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் பொறுப்புணர்வுடன் தங்கள் பங்கை செலுத்த முன்வந்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

ஆதாரங்கள்:

அ. மார்க்ஸ் எழுதிய 'நான் புரிந்து கொண்ட நபிகள்'

எம்.அசோகன் எழுதிய 'சாவர்க்கர் உண்மைச் சித்திரம்'

கி. வீரமணி எழுதிய 'காஞ்சி சங்கராச்சாரியார்கள் மீது கொலை வழக்கு - ஏன்? எதற்கு? எப்படி?'

*(முதல் பக்கத் தொடர்ச்சி.(இணையம்...)*

ஏறக்குறைய சவூதியின் மக்கள் தொகைக்குச் சமம். அங்குள்ள மொத்த பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை 90. அதே சமயம் சவூதி அரேபியாவிலுள்ள மொத்த பல்கலைக்கழகங்கள் எத்தனை தெரியுமா? வெறும் 8 மட்டுமே. இதிலும் 3 பல்கலைக்கழகங்கள் மார்க்கக் கல்வியை மட்டும் கற்றுக்கொடுப்பவை. அறிவியல் கல்விக்கு 5 பல்கலைக்கழகங்கள் மட்டுமே.

சமீபத்தில் சவூதியின் தலைநகர் ரியாத்தில் நடந்த ஒரு கருத்தரங்கில் உலகப் புகழ்பெற்ற "சர்வதேச அடிப்படை இயற்பியல் மையத்தில் (International Center for Theoretical Physics-Icttp) தலைவர் R. சீனிவாசன் கூறினார் "ஆய்வு மற்றும் வளர்ச்சிப் பள்ளிகளுக்கு அரபு நாடுகள் ஒதுக்கும் தொகை 0.15% மட்டுமே. இது உலகநாடுகள் (research and development) ஆய்விற்கு ஒதுக்கும் தொகையான 1.4% காட்டிலும் மிகக்குறைவு என்பதைச் சுட்டிக்காட்டினார். பல்கலைக்கழகங்கள் ஆய்வுமையங்கள் இருந்தால்தான் அதற்கு பண ஒதுக்கீடு செய்யவேண்டும் என்ற உண்மையை நாம் புரிந்து கொள்வோம்.

இருப்பினும் ஒரு ஆறுதல் அளிக்கக்கூடிய செய்தி புதிதாக பதவியேற்றுள்ள சவூதி அரேபிய மன்னர் அப்துல்லாஹ் அவர்கள் அவ்வருடம் மொத்த பட்ஜெட்டில் 26% கல்வி, வளர்ச்சி ஆய்வுப்பணிகளுக்கு ஒதுக்கியுள்ளார். புதிய பல்கலைக்கழகங்கள் கல்லூரி, ஆய்வுக்கூடம் மற்றும் பொது நூலகங்கள் தொடங்குவதற்கு உத்தரவு பிறப்பித்துள்ளனர். எனினும் காலம் கடந்து இன்று விதைக்கும் கல்வி எனும் விதை முளைத்து பலன் கொட்டுவதற்கு இன்னும் 25 ஆண்டுகள் ஆகலாம். அதற்குள் மேலைநாடுகள் வளர்ச்சியில் வெகுதூரம் சென்றுவிடும். காலம் யாருக்கும் காத்திருக்காது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

இம் மேற்கத்திய நாடுகள், முஸ்லிம்கள் கல்வியை மட்டும் கட்டம் கட்டவில்லை. முஸ்லிம் விஞ்ஞானிகளையும் விட்டுவைக்கவில்லை. UNESCO-வின் ஆய்வறிக்கையின்படி 2003ல் சுமார் 170-180 விஞ்ஞானிகள் ஈராக்கில் கொல்லப்பட்டனர். உயிருக்குப்பயந்து ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள் நாட்டை விட்டே ஓடினர். இந்த தகவலையும் ICTP தலைவரே கூறினார். (ARAB NEWS 14 APRIL 2006).

ஒட்டு மொத்த முஸ்லிம்களின் அறிவுக் கண்களைப் பறித்து அவர்கள் தற்குறி சமுதாயமாக தன்னை அண்டிப் பிழைக்கும் அடிமை சமுதாயமாக மாற்றவே மேலை நாடுகள் பாடுபடுகின்றன.

இருப்பினும் அல்லாஹ்வின் பேரருளால், எந்த ஆதிக்கச் சக்திகள் நாம் அறிவு பெற தடையாக உள்ளனரோ, அவர்கள் மூலமே இணையத்தை (INTERNET) உருவாக்கி நமக்கு உதவியுள்ளனான். இதற்குக் காரணம்

அல்லாஹ் கூறுகின்றான், **விசுவாசம் கொண்டோரே "மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தார்களிளெல்லாம்) மிக்க மேன்மையான சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள். (ஏனெனில்) நன்மையான காரியங்களை நீங்கள் ஏவுகிறீர்கள், தீமையை விட்டும் அவர்களை நீங்கள் விலக்குகிறீர்கள்.**

*(அல்-குர்ஆன் 3:110)*

நீங்களே மேலான சமுதாயம் என்று சிறப்பித்துக்கூறப்பட்ட முஸ்லிம்களின் தோள்களில் பெரும் பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. ஒழுக்கக் கேட்டில் வீழ்ந்து மிருக வாழ்க்கை வாழ்ந்து வரும் பிற மக்களை நேர்வழிக்கு அழைக்க வேண்டிய கடமை நம்முன் உள்ளது. இப்பெரும் பணியை மிக எளிதாக எந்த துன்பமுமின்றி நிறைவேற்றுவதற்காகவே அல்லாஹ் இணையத்தை நமக்கு தந்துள்ளான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் கூறியதை நாம் என்றும் நினைவில் கொள்ள வேண்டும். "இரண்டு மனிதர்களைத் தவிர மற்றொருவரிடம் எந்த நன்மையையும் இல்லை. ஒருவர் கற்றுக்கொடுப்பவர், ஒருவர் கற்றுக் கொள்பவர்.

உலகமும் அதில் உள்ளவைகளும் சபிக்கப்பட்டதாகும். அல்லாஹ் திக்ரையும், அதனுடன் தொடர்புடைய நல்அமல்களையும் (கற்றுக்கொடுக்கும்) அறிஞரையும், அல்லது கற்றுக்கொள்பவரையும் தவிர"

***அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி), ஆதாரம்: திர்மிதி***

கற்றுக் கொள்வதற்கு இணையம் ஒரு சிறந்த, திறந்த பல்கலைக்கழகமாக உள்ளது.

"கல்வியைத்தேடி வீட்டைவிட்டுச் செல்பவன் இறைவனது பாதையில் நடக்கிறான்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***அறிவிப்பவர்: அனஸ்(ரலி), ஆதாரம்: திர்மிதி***

நாம் உட்கார்ந்த இடத்திலிருந்தே இறைவனது பாதையில் செல்ல உதவும் இணையற்ற சாதனம் இண்டெர்நெட். இஸ்லாத்தின் அழகிய ஒழுக்க மாண்புகளை பிற மக்களுக்கு எத்தி வைக்க, தவறான சிந்தனை கருத்துக்களை மாற்றி சமாதானத்தின் பக்கம் அவர்களை அழைக்க Chat-Email வசதியை இணையம் நமக்கு வழங்கியுள்ளது.

நிச்சயமாக அல்லாஹ் மக்களுக்கு நல்லவற்றைக் கற்றுக் கொடுப்பவனுக்கு, அருள் புரிகின்றான். வானவர்களும், வானில், பூமியில் உள்ளோரும் பொந்தில் உள்ள எறும்புகளும், மீன்களும் அவனுக்கு அருள்கிடைக்க துஆச் செய்கிறார்கள்" என்று நபி(ஸல்) கூறினார்கள்.

***அறிவிப்பாளர்: அபூஉமாமா(ரலி), ஆதாரம்: திர்மிதீ***

இணையத்தின் ஈ-மெயில், சாட்டிங் மூலம் பிறரின் அறிவுக் கண்களை திறக்க முயற்சிக்கலாம், அல்லாஹ் நாடியவர்களுக்கு நேர்வழிகாட்டுவான். நமது முயற்சி சிறிது, அல்லாஹ்வின் கூலியோ அளப்பெரியது.

இணையத்தை வீணாகப் பயன்படுத்தி நமது பொருளையும் நேரத்தையும் பாழ்படுத்திடக் கூடாது. நபி(ஸல்) அவர்கள் அடிக்கடி கேட்கும் துஆவில் இதுவும் ஒன்று "யா அல்லாஹ் பயனற்ற கல்வி பெறுவதை விட்டும் உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன்.

இறைவா! பயன் இல்லாத கல்வியை விட்டும் (இறை) அச்சமில்லாத உள்ளத்தை விட்டும், ஏற்றுக்கொள்ளப்படாத துஆவை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன் என்று நபி(ஸல்) அவர்கள் கூறுபவர்களாக இருந்தனர்.

***அறிவிப்பாளர்: ஸைது இப்னு அர்கம்(ரலி), ஆதாரம்: முஸ்லிம், திர்மிதி, நஸயீ***

இன்றைய அமெரிக்க, பிரிட்டானிய கூட்டுப்படைகள், முஸ்லிம் நாடுகளை குறிவைத்து தாக்குவதற்கும், மிரட்டுவதற்கும் அடிப்படைக் காரணம்...

***(தொடர்ச்சி அடுத்த இதழில்..இன்ஷாஅல்லாஹ்***

# மனிதா நீ எதற்காக படைக்கப்பட்டாய்! பாகம் - உ

***M. ஜமீலா B.A., (Arabic), அஸ்மா அரபி கல்லூரி, ஏர்வாடி***

இறைவன் கொடுத்த அருட்கொடையான நேரங்களில் ஐந்து நேர தொழுகையில் ஒரு நேரத்திற்காக ஒதுக்கும் அரை மணி நேரம் மட்டும் இறைவனை வணங்கிவிட்டு மற்ற நேரங்களில் ஒழுக்கம் இல்லாமல் தன் மனம் போன போக்கில் வாழ்ந்தால் அவன் இறை நம்பிக்கையாளனாக ஒரு போதும் ஆக முடியாது.

பனூ இஸ்ராயீல் காலத்தில் நடந்த ஒரு சம்பவம். 3 பேர் பிரயாணம் செய்கிறார்கள் போகும் வழியில் மழை பொழிகிறது ஒரு குகையில் ஒதுங்குகின்றார்கள் ஒரு பெரிய (பாறாங்) கல் குகையின் வாயிலை அடைத்து விடுகிறது. மூன்று பேரும் இறைவனிடம் பிரார்த்தித்தார்கள். ஒருவர் கூறினார், இறைவா! நிறைய செல்வத்தை நீ கொடுத்தாய் அச்சமயம் பார்த்து பக்கத்து வீட்டு பெண் ஏழ்மையாக இருந்தாள். நான் அந்த ஏழ்மையை பயன்படுத்தி என் ஆசைக்கு இணங்க கேட்டேன் ஒரு சமயம் அவளுக்கு இக்கட்டான நேரம் வந்தபோது (பணத் தேவைக்கு) அவளே என்னிடம் வந்தாள் நான் அவளை நெருங்கும் போது நீ இறைவனை அஞ்சிக்கொள் என்று கூறினாள், உடனே விலகினேன் என்று அவர் செய்த நற்செயலை கூறி பிராத்தனை செய்தார் பாறை கொஞ்சம் விலகியது.

இரண்டாமவர், இறைவா! என்னிடம் ஒரு நபர் வேலைக்கு வந்தார் சில காலம் வேலை செய்துவிட்டு கூலி வாங்காமல் போய்விட்டார், அந்த கூலித் தொகையை மூலதனமாக கொண்டு ஆட்டு மந்தை உருவானது, பிறகு அந்த நபர் வந்து கூலி கேட்டார் நான் அந்த ஆட்டு மந்தையை அவருக்கு கொடுத்தேன்... என்று கூறி பிராத்தனை செய்தார் அப்போதும் கல் கொஞ்சம் விலகியது, முன்றாமவர், என் இறைவா! எனக்கு வயதான பெற்றோர் இருந்தார்கள் அவர்களுக்கு உணவு கொடுத்துதான் நான் சாப்பிடுவது வழக்கம் ஒரு நாள் நான் பால் கறந்து வருவதற்குள் அவர்கள் இருவரும் தூங்கிவிட்டார்கள் அவர்கள் விடிந்து விழிக்கும் வரை அவர்கள் பக்கத்தில் அமர்ந்து இருந்து அப்பாலை கொடுத்து பிறகு நான் பருகினேன் என்று கூறி பிராத்தித்தார் அப்பொழுது அப்பாறை முழுமையாக விலகியது.

மேற்கண்ட சம்பவத்திலிருந்து நாம் படிப்பினை பெறுவது என்னவென்றால் அவரவர்கள் செய்த ஒவ்வொரு நற்செயலையும் அல்லாஹ்விடம் பிராத்தனை செய்து சிக்கலில் இருந்து விடுதலை பெற்றார்கள். அவ்வாறாக நாமும் நமக்கு பிரச்சினைகள் ஏற்படுகின்ற நேரத்தில் நம்முடைய நல்லமல்களை எடுத்துச் சொல்லி அல்லாஹ்விடம் கேட்டால் அல்லாஹ் நிச்சயம் உதவி செய்வான். ஆனால் நம் சமுதாய மக்களோ, ஒரு பக்கம் ஒழுக்கம் இல்லாமல் அலைகின்றனர், மறுபக்கம் மூடநம்பிக்கையில் விழுந்து தன்னைத்தானே அழித்துக் கொள்கின்றனர்

உனக்கே நாங்கள் அடிபணிகிறோம் உன்னிடமே நாங்கள் உதவி கேட்கிறோம் என்று தினமும் 5 வேளை தொழுகையில் ஓதிக் கொண்டு தனக்கு ஏதாவது கஷ்டமோ, நோயோ வந்தால் மற்றும் சந்தோஷம் தரக்கூடிய நிகழ்வுகள் அதாவது திருமணம் இதுபோன்றவை நடந்தால் பால்கிதாப் மற்றும் ஜோஸியம் பார்க்கக் கூடியவர்கள் நம் சமுதாயதிலும் இருக்கத்தான் செய்கின்றனர் என்பதை எண்ணும்பொழுது மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றது. நறுமணத்திற்காக பத்தி வைக்கக்கூடிய வழக்கம் மாறி, இந்த பத்தி வைப்பதுகூட ஒரு வணக்கம் என்ற நிலைக்கு ஆகிவிட்டார்கள், இந்த பலவீனத்தை பயன்படுத்தி சிலர் தங்களிடம் வந்தால் செய்வினை எடுத்துத் தரப்படும் என்றும் நோய் தீர்க்கப்படும் என்றும் நள்ளிரவுகளில் பெண்களோடு இருந்து கூத்தடித்துக் கொண்டிருப்பதை நம் சமுதாயத்திலும் மெல்ல தலைகாட்டுவதை பத்திரிக்கைகள் மூலமாக அறிய முடிகிறது.

மூடநம்பிக்கையில் மூழ்கியவர்களோ அவர்கள் தங்கள் பிரச்சனைகளை தீர்த்து வைப்பார்கள் என்று தங்கள் செல்வத்தை அவர்களிடம் வாரி வழங்கி ஏழ்மையாகின்றனர் மற்றொருபுறம் தங்கள் மன அமைதியை இழந்து மனநோய்க்கு ஆளாகின்றனர். எல்லாவற்றையும் விட தன் ஈமானையும் இழந்துவிடுகின்றனர். இறுதியில் அவனுக்கு பேய் பிடித்து விட்டது என்று இஸ்லாத்தில் இல்லாத ஒன்றை கூறி அவனை அழித்து விடுகின்றனர் மூட நம்பிக்கையுள்ளவர்களை பார்த்து இறைவன் கூறுகிறான்.

**உலகில் மற்ற மதங்களில் சொல்லும் கலாச்சாரங்களை விட இஸ்லாம் ஒரு மனிதனுக்கு உயர்ந்த கலாச்சாரங்களை கூறி நீ அதன்படி வாழ வேண்டும் இல்லையென்றால் உனக்கு இரண்டு உலகிலும் அதற்கான தண்டனையுண்டு என்று கண்டித்து கூறுகிறது ஒவ்வொரு மனிதனும் ஒழுக்கத்துடன் வாழத்தான் நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை திறந்த புத்தகமாக உள்ளது.**

**எவர்கள் அறிவில்லாமல் மடமையின் காரணமாகத் தனது குழந்தைகளைக் கொன்றவர்களும், அல்லாஹ்வின் பெயரால் இட்டுக்கட்டி அல்லாஹ் அவர்களுக்கு வழங்கியதைத் தடுக்கப்பட்டதாக ஆக்கிக்கொண்டோரும் நஷ்டம் அடைந்தனர், வழி கெட்டனர், நேர் வழி பெறவில்லை (அல்-குர்அன் 6: 140)**

உலகில் மற்ற மதங்களில் கூறப்படும் கலாச்சாரங்களை விட இஸ்லாம் ஒரு மனிதனுக்கு உயர்ந்த கலாச்சாரத்தைக் கூறி நீ அதன்படி வாழ வேண்டும். இல்லையென்றால் உனக்கு இரு உலகிலும் அதற்கான தண்டனையுண்டு என்று கண்டித்து கூறுகிறது. ஒவ்வொரு மனிதனும் ஒழுக்கத்துடன் வாழத்தான் நபி(ஸல்) அவர்களின் வாழ்க்கை திறந்த புத்தகமாக உள்ளது.

நபி(ஸல்) அவர்களை பார்த்து இறைவன் தன் திருமறையில் கூறுகிறான். **இன்னும் (நபியே) நாம் உம்மை மனித குலம் முழுமைக்கும் நன்மாராயம் கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமேயன்றி (வேறெவ்வாறும்) அனுப்பவில்லை, ஆனால் மனிதர்களில் பெரும்பாலோர் (இதை) அறியமாட்டார்கள் (அல்-குர்ஆன் 34: 28)**

**மனிதர்களை அவர்களுடைய இறைவனின் அனுமதியைக் கொண்டு இருள்களிலிருந்து வெளியேற்றிப் பிரகாசத்தின்பால் நீர் கொண்டு வருவதற்காக இவ்வேதத்தை நாமே உம்மீது இறக்கியிருக்கின்றோம் (அல்-குர்ஆன் 14:1)**

ஆகவே! என் இஸ்லாமிய சமுதாய சகோதர, சகோதரிகளே! ஒரு மனிதனுக்கு தொழுகை அவசியம், நோன்பு அவசியம்,

ஜக்காத் அவசியம் இதை மட்டும் செய்தால் இறைவனிடம் ஈடேற்றம் பெற்றிட முடியாது. மனிதனின் வாழ்வில் இறைவன் வகுத்து கொடுத்தளவு அவனுக்கு பயந்து ஒவ்வொரு விஷயத்திலும் மூடநம்பிக்கைகளை உடைத்தெறிந்து அற்பமான விஷயங்களால் கவர்ந்து இழுக்கும் தன் மனதை அவற்றிக்கு மயங்கவிடாமல் ஒழுக்கத்தில் உயர்வாய் வாழ்ந்து நாமும் சுவர்க்கம் செல்ல வேண்டும், பிறரையும் அழைத்து செல்ல வேண்டும் என்ற இலட்சியத்தோடு இருங்கள்.

இறைவன் கூறுகிறான். **மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தில்) சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள் (ஏனெனில்) நீங்கள் நல்லதைச் செய்ய ஏவுகிறீர்கள் தீயதை விட்டும் விலக்குகிறீர்கள். இன்னும் அல்லாஹ்வின்மேல் (திடமாக) நம்பிக்கை கொள்கிறீர்கள். வேதத்தையுடையோரும் (உங்களைப் போன்றே) நம்பிக்கை கொண்டிருப்பின், (அது) அவர்களுக்கு நன்மையாகும் - அவர்களில் (சிலர்) நம்பிக்கை கொண்டோராயும் இருக்கின்றனர். எனினும் அவர்களில் பலர் (இறை கட்டளையை மீறும்) பாவிகளாகவே இருக்கின்றனர். (அல்-குர்ஆன் 3: 110)**

இவ்வசனத்தின்படி நாம் நம்முடைய செயல்களில் அழகானவர்களாக இருந்தால் உலகமே நம்மை திரும்பி பார்க்கும் அதில் ஒவ்வொரு மனிதனும் ஒழுக்கத்தோடு வாழ நம்மிடையே அழகிய முன்னோடிகளை இறைவன் காட்டித் தருவான் இறைவன் நம்மை படைத்த நோக்கத்தை நாம் சரியாக புரிந்து அதன்படி வாழ்ந்து சுவர்க்கத்தை நாம் அடைய இறைவன் வழிகாட்டுவானாக!

# ஆரோக்கிய வாழ்வு தரும் தண்ணீர்

மனித உடலின் மொத்த எடையில் 60 சதவீதம் இருப்பது தண்ணீர் தான். உடலின் இயக்கத்திற்கு இது மிகவும் அத்தியாவசியமானது. பொதுவாக ஆரோக்கியமான ஒரு நபர் உணவு இல்லாமல் குறைந்தது 6 முதல் 8 வாரங்கள் வரை கூட உயிர் வாழ முடியும். தண்ணீரில் எவ்வித கலோரியோ அல்லது சத்தோ கிடையாது என்ற போதிலும் தண்ணீரின்றி யாராலும் உயிர் வாழ முடியாது. 5 முதல் 10 சதவீதம் வரை உடலில் இருந்து தண்ணீர் இழப்பு ஏற்பட்டால் அது மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். அதே நேரத்தில் 15 முதல் 20 சதவீதம் வரை தண்ணீர் இழப்பு ஏற்படும் பட்சத்தில் அது ஏறக்குறைய மரணத்திற்கு இட்டுச் செல்லலாம்.

மனித உடலில் ஜீரணம், வியர்வை வெளியேற்றம், உடலுக்குள் சத்துணவை எடுத்துச் செல்வது, திரவ மற்றும் திடக் கழிவுகளை வெளியேற்றுவதற்கு, உடலின் வெப்பநிலையை சீராக வைத்திருப்பது போன்ற பல்வேறு ரசாயண மாற்றங்கள் நிகழ்வதற்கு தண்ணீர் அவசியமாகிறது. உடலில் உள்ள திசுக்களுக்கு ஒரு பாதுகாப்பு போர்வை அல்லது மெத்தை போன்று தண்ணீர் செயலாற்றுகிறது.

மனித உடலுக்கு அன்றாடம் சராசரியாக 6 முதல் 8 டம்ளர் வரையிலான தண்ணீர் தேவையாகிறது. ஒவ்வொரு நாளும் உடலின் தண்ணீர் தேவை மாறுபடுகிறது. காபி, டீ, பழச்சாறுகள், பழங்கள், காய்கறிகள், முட்டை, மாமிசம், உணவு வகைகள், மீன், பிரட் போன்றவற்றிலிருந்தும் தண்ணீர் எடுத்துக் கொள்ளப்படுகிறது. வெப்பமான சூழ்நிலையில், கோடை காலத்தில் நமது உடலுக்கு அதிக அளவு தண்ணீர் தேவைப்படுகிறது.

# அல்லாஹ்வின் சாபத்திற்குள்ளானவர்கள்

ஒருவர் இன்னொருவரை குறிப்பிட்டு சபிப்பது கூடாது. ஆனால் பெரும் பாவம் செய்பவர்களுக்கு அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும் என்று யாரையும் பெயர் குறிப்பிடாமல் கூறுவதற்கு இஸ்லாத்தில் அனுமதி உண்டு. பின்வரும் ஹதீஸ்கள் அதற்கு சான்றாக இருக்கின்றது.

அல்லாஹ் தன் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்.

அறிந்து கொள்ளுங்கள் இத்தகைய அநியாயக்காரர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகும்.(11:18)

அல்லாஹ்வின் சாபம் அநியாயக்காரர்கள் மீது உள்ளது என அறிவிப்பாளர் அறிவித்தார். (7:44)

நபிமொழிகள்

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

• "ஒரு பெண்ணின் தலைமுடியை மற்றொரு பெண்ணின் கூந்தலில் முடிந்துவிடும் பெண்ணையும், அவ்வாறு முடிந்து விடும்படி கேட்கும் பெண்ணையும் அல்லாஹ் சபித்துவிட்டான்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

• வட்டி உண்ணுபவரை அல்லாஹ் சபித்துள்ளான்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

• உருவங்கள் வரைவோரை அல்லாஹ் சபித்துள்ளான்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

• பூமியின் (எல்லைகளை பிரிக்கும்) அடையாளங்களை மாற்றிவிடுபவரை அல்லாஹ் சபித்துவிட்டான்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

• முட்டை திருடுபவரை அல்லாஹ் சபித்துவிட்டான்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

• பெற்றோரை சபிப்பவரை அல்லாஹ் சபித்துவிட்டான். அல்லாஹ் அல்லாதவைகளின் பெயரால் அறுப்பவரை அல்லாஹ் சபித்துவிட்டான்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

• யார் இந்த மார்க்கத்தில் புதிதான நடைமுறைகளை உண்டாக்குகிறாரோ அல்லது அவ்வாறு உண்டாக்குபவரை ஆதரிக்கிறாரோ அவர்மீது அல்லாஹ், மலக்குகள் மற்றும் எல்லா மனிதர்களின் சாபங்களும் உண்டாவதாக!

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

• யா அல்லாஹ்! ரி∴லு, தக்வான், உஸய்யா ஆகிய கூட்டத்தார்களின் மீது உன் சாபத்தை இறக்கி வைப்பாயாக! அவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனின் தூதருக்கும் மாறு செய்துவிட்டார்கள்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

• யூத கிறிஸ்தவர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக! அவர்களின் நபிமார்களின் கப்ருகளை மஸ்ஜிதுகளாக (வணங்குமிடமாக) எடுத்துக் கொண்டார்கள்.

• ஆண்களுக்கு ஒப்பாக நடக்கும் பெண்களையும், பெண்களுக்கு ஒப்பாக நடக்கும் ஆண்களையும் நபி(ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள்.

# குன்று உயரத்திற்கு கூடு கட்டும் கண் பார்வையற்ற கறையான்கள்

அல்லாஹ்வின் அற்புதப் படைப்புகள் - பாகம் 4

**- (ஆங்கில மூலம்: ஹாரூன் யஹ்யா) தமிழில் : அபூ இஸாரா**

எறும்புகளைப் போல கறையான்கள் உருவத்தில் சிறியதாக இருந்தாலும், திறமையில் சிறந்தவை. உயர்ந்த கட்டிடத்தைப் போல கட்டப்பட்ட கறையான் புற்று இந்த சிறிய படைப்புகளால் கட்டப்பட்டது. ஆயினும் எந்தவித தவறுமின்றி இந்த புற்றுக்களை கறையான்கள் வகுக்கப்பட்ட ஒரு திட்டத்தின்படி கட்டுகின்றன. இளம் குஞ்சுகள் தங்குவதற்கு தனி அறை, கறையான்கள் உணவாக உட்கொள்ளும் காளான்களை உருவாக்குவதற்கு தனிக் கூடம், மற்றும் ராணியின் அறை என பல சிறிய மற்றும் பெரிய பிரிவுகளைக் கொண்டதுதான் கறையான் புற்று.

புற்றுக்களில் முக்கியத்துவம் வாய்ந்தது அதன் உள்ளறைகளில் கறையான்கள் உருவாக்கும் பிரத்யேக குளிர்ந்த காற்றோட்ட வசதி (Ventilation). மிக மெல்லியத் தோல்களால் படைக்கப்பட்ட கறையான்கள் உயிர் வாழ குளிர்ந்த காற்று தேவை, எனவே கறையான்கள் தங்களது புற்றுக்களில் உள்ள அறைகளின் சீதோஷண நிலையை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு குளிர்ந்த நிலையில் வைத்துக் கொள்வது அவசியமாகிறது. அவ்வாறு இல்லையெனில் உஷ்ணத்தின் காரணமாக கறையான்கள் உயிரிழக்க நேரிடும்.

எனவே கறையான்கள் தங்களது புற்றுக்களிள் உட்புறம் காற்று புகும் வகையில் துளைகளை உருவாக்குகின்றன. புற்றுக்களின் தரைப்பகுதியைத் தோண்டி தண்ணீரை கசியச் செய்கின்றன. புற்றுக்களின் தரைப்பகுதியில் கசியும் தண்ணீரும், வெளியிலிருந்து வரும் காற்றும் கலந்து கறையான்களுக்குத் தேவையான குளிர்ந்த சீதோஷ்ண நிலை உருவாகிறது. இந்த குளிர்ந்த காற்றின் மூலம் கறையான்கள் தங்கள் புற்றுகளில் அவைகள் உயிர் வாழ்வதற்குத் தேவையான ஈரப்பதத்தையும், வெப்ப நிலையையும் சம நிலையில் வைத்துக் கொள்கின்றன.

மேற்கண்ட முறையில் கறையான்கள் தங்கள் புற்றுக்களில் உள்ள சீதோஷ்ண நிலையை கட்டுப்படுத்துவது எத்தனை கடினமான வேலை என்பதை சிந்தித்துப் பார்த்தீர்களா? இத்தகைய கடினமான வேலையை செய்து முடிப்பதற்கு கறையான்கள் ஒரு குறிப்பிட்ட வரையரைக்குள் பல விஷயங்களை ஒன்றிணைத்து அவைகளை தங்களது கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும். தவிர, கறையான்கள் செய்கின்ற எண்ணற்ற காரியங்களில் சுருக்கமாக ஒரு சிலவற்றைத்தான் நாம் இங்கே குறிப்பிட்டிருக்கிறோம். இங்கே குறிப்பிட்டிருக்கும் செயல்களோடு இன்னும் ஏராளமான செயல்களை கறையான்கள் செய்கின்றன.

கறையான்களின் குணநலன்களில் முக்கியமான மற்றொன்று யாதெனில், அவைகள் தங்கள் புற்றுக்களை பாதுகாக்கும் விதம். கறையான் புற்றுக்களின் உயரம் ஏழு மீட்டர் வரை (21 அடி) இருக்கும். இந்த புற்றுக்களில் ஒரு சிறிய பழுது ஏற்பட்டுவிட்டாலும் உடனடியாக கரையான்கள் எச்சரிக்கையாகி விடுகின்றன. பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் கறையான்கள் தங்களது தலைகளை புற்றுக்களின் சுவர்களில் மோதி மற்ற கறையான்களை விழிப்படையச் செய்கின்றன. எச்சரிக்கை செய்தி கிடைத்ததும் விழிப்புற்ற மற்ற கறையான்கள் குஞ்சுப் பருவத்தில் இருக்கும் கறையான் முட்டைகளை (Larve) பாதுகாப்பான மற்றொரு அறைக்கு எடுத்துச் செல்கின்றன.

ராஜா மற்றும் ராணி கறையான்கள் இருக்கும் அறையின் வாயிற்பகுதி உடனடியாக கட்டப்படும் சுவர் மூலம் மூடப்படுகிறது. பாதிக்கப்பட்ட பகுதி முழுவதையும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் கரையான்கள் சூழந்து கொள்கின்றன. பாதிக்கப்பட்ட பகுதிக்கு சுவர் கட்டத் தேவையான பொருட்கள் யாவும் வேலைக்கார கறையான்களால் கொண்டு வரப்படுகின்றது. சில மணி நேரங்களில் பாதிக்கப்பட்ட பகுதியின் வெளிப்பகுதி, மற்றும் உட்பகுதி முழுவதும் சரி செய்யப்படுகின்றது, இவ்வாறு பல பிரிவைச் சார்ந்த ஒவ்வொரு கறையான்களும் அவசர காலங்களில் மட்டுமின்றி சாதாரண வேளைகளிலும் ஒழுங்குற வகுக்கப்பட்ட ஒரு திட்டத்தின் கீழ் செயல்படுவது போல எந்தவித குழப்பமுமின்றி சிறப்புற செயல்படுகின்றன.

இவ்வாறு அவைகள் ஒரு குறுகிய கால அவகாசத்தில் தங்களுக்கு இடப்பட்ட பணிகளை இத்தனை சிறப்பாக முடிப்பதிலிருந்து கறையான்களுக்கிடையே முறையாக தொடர்பு கொள்ளும் திறமை உண்டென தெளிவாக அறிய முடிகிறது. கறையான்கள் தங்களுக்கிடையே வேலையை முறையாக பகிர்ந்து கொள்கின்றன, பகிர்ந்து கொண்ட வேலைகளுக்கேற்ப எந்தவித குழப்பமுமின்றி வானளாவிய உயரத்திற்கு கூடுகள் கட்டுகின்றன. கட்டிய கூட்டினை பாதுகாப்பதற்கென முன்னெச்சரிக்கையான திட்டங்கள் தீட்டி அதன்படி செயல்படுகின்றன, இத்தனை வேலைகளையும் திறமையாக செய்து முடிக்கும் கறையான்கள் பார்வையற்றவை.

கறையான்கள் செய்கின்ற வேலைகள் எதனையும் கறையான்களால் பார்க்க முடிவதில்லை. பார்வையற்ற கறையான்கள் எப்படி இத்தனை திறமைசாலிகளாக இருக்கின்றன? எப்படி இத்தனை பெரிய திட்டங்கள் தீட்டி அதன்படி செயல்படுகின்றன?

இதுபோன்ற கேள்விகளுக்கு “பரிணாம வளர்ச்சிக் கொள்கை”க்காரர்கள் அளிக்கும் பதில் என்ன தெரியுமா? கறையான்கள் கொண்டிருக்கும் இத்தனை திறமைகளும் அவைகளுக்கு “எதேச்சையாக உருவாயின” என்பதுதான். எப்படி சிந்தித்தாலும் அவர்கள் கூறும் இந்த பதில் தவறானதே. ஏனென்றால் கறையான்களின் புற்றில் உள்ள ஒரு சிறிய பகுதிகூட - உதாரணத்திற்கு அவைகள் ஏற்படுத்தும் காற்றோட்ட வசதி - “எதேச்சையாக உருவானது இல்லை” என்பதற்கு உதாரணமாக எடுத்துக் கூற போதுமானதாகும். மேலும் கறையான்களுக்கு அவைகள் என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றி கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதும் தெளிவு.

அருள்மறை குர்ஆனில் அல்லாஹ், தேனீக்களை சிந்திக்கும் மக்களுக்கு அத்தாட்சி என குறிப்பிடுகிறான். அத்தோடு அதனை நாம் அல்லாஹ்வின் அத்தாட்சியாகக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடுகிறான். அருள்மறை குர்ஆனின் 16வது அத்தியாயத்தில் தேனீக்களைப் பற்றி அல்லாஹ் குறிப்பிடுகின்றான். தேனீக்கள் நமக்காக தேனை உருவாக்குகின்றன என்பதும், அந்த தேனை உருவாக்குவது எப்படி என்று வல்ல அல்லாஹ் தேனீக்களுக்கு கற்றுக்

கொடுத்திருக்கிறான் என்றும் மேற்படி வசனத்தில் வல்ல அல்லாஹ் குறிப்பிடுகிறான்.

**"உம் இறைவன் தேனீக்கு அதன் உள்ளுணர்வை அளித்தான். "நீ மலைகளிலும், மரங்களிலும், உயர்ந்த கட்டடங்களிலும் கூடுகளை அமைத்துக் கொள்" (என்றும்) "பின், நீ எல்லாவிதமான கனி(களின் மலர்)களிலிருந்தும் உணவருந்தி உன் இறைவன் (காட்டித் தரும்) எளிதான வழிகளில் (உன் கூட்டுக்குள்) ஒடுங்கிச் செல்" (என்றும் உள்ளுணர்ச்சி உண்டாக்கினான்). அதன் வயிற்றிலிருந்து பலவித நிறங்களையுடைய ஒரு பானம் (தேன்) வெளியாகிறது, அதில் மனிதர்களுக்கு (பிணி தீர்க்கவல்ல) சிகிச்சை உண்டு, நிச்சயமாக இதிலும் சிந்தித்துணரும் மக்களுக்கு ஓர் அத்தாட்சி இருக்கிறது."**

***அல் குர்ஆன் 16:- 68, 69வது***

எப்படி தேனை உருவாக்க வேண்டும் என்று தேனீக்களுக்கு அல்லாஹ் கற்றுக் கொடுத்தது பற்றி அருள்மறை குர்ஆனின் வசனத்தில் குறிப்பிட்டது போன்று கறையான்களுக்கும் அல்லாஹ்வே எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்திருக்கிறான். வல்ல அல்லாஹ்வே பார்வையற்ற இந்த உயிரினங்களுக்கு அவைகள் தொடர்பு கொள்ளக்கூடிய முறைகளை பற்றியும் அறிவித்து, லட்சக்கணக்காக கறையான்களில் ஒவ்வொன்றுக்கும் அவைகள், அவைகளின் கூடுகளில் செய்ய வேண்டிய அனைத்தையும் கற்றுக் கொடுத்திருக்கிறான் என்பதும் நாம் பெறும் தெளிவு.

அருள்மறை குர்ஆனில் அல்லாஹ் சுட்டிக்காட்டுகின்றான்:

**"மனிதர்களே! உங்கள் மீது அல்லாஹ் வழங்கியுள்ள பாக்கியங்களைச் சிந்தித்துப் பாருங்கள், வானத்திலும், பூமியிலிருந்தும் உங்களுக்கு உணவளிப்பவன், அல்லாஹ்வையன்றி (வேறு) படைப்பாளன் இருக்கின்றானா? அவனையன்றி வேறு நாயன் இல்லை, அவ்வாறு இருக்க, (இவ்வுண்மையை விட்டும்) நீங்கள் எவ்வாறு திருப்பப்படுகிறீர்கள்."**

***அலகுர்ஆன் : 35: 3***

# புதிய டிரா:.பிக் விதிமுறைகள்

ரியாத், 20 பிப்ரவரி 2007. சவூதி அரேபியாவில் கடந்த 35 வருடங்களாக மாற்றப்படாமல் இருந்து வந்த மோட்டார் வாகனச் சட்டங்கள் தற்போது சவூதியின் டிரா:.பிக் அதிகாரிகள் மாற்றியமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

சவூதி அரேபியாவின் டிரா:.பிக் துறையின் இயக்குனரான மெஜஸ்டிக். ஜெனரல் :.பஹுத் அல்-பிஸ்ர், அவர்கள் கடந்த பிப்ரவரி 19, 2007 அன்று அரப் நியூஸ் பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியிருப்பதாவது, புதிய டிரா:. பிக் விதிமுறைகள் செயலாக்கம் தற்போது இறுதி கட்டத்தில் இருந்து கொண்டிருக்கின்றது. இப்பணி மிகவிரைவில் முடிவடைந்துவிடும்.

மேலும் அவர் கூறியதாவது, புதிய டிரா:.பிக் விதிமுறைகள் தற்போதுள்ள பல பழைய விதிமுறைகளை மாற்றியமைக்கும். புதிய டிரா:.பிக் விதிமுறைகளின் படி, வாகனம் ஓட்டும் பொழுது மொபைல் போன்களை பேசுவது குற்றத்திற்குள்ளானது. அதற்காக அவர் தண்டத்தொகை கட்டியாக வேண்டும். வளைகுடா நாடுகளில் இந்த விதியை நடைமுறைப்படுத்தும் இரண்டாவது நாடாக சவூதிஅரேபியா இருக்கும். சீட் பெல்ட் அணியாமல் வாகனம் ஓட்டுவதோ, அமர்ந்து செல்வதோ அல்லது குழந்தைகளுக்கான பாதுகாப்பு சீட் இல்லாமல் இருப்பதோ தண்டனைக்குரியது ஆகும். இந்த புதிய விதிமுறைகள் சவூதி அரேபியாவின் தேசிய அளவில் பொருந்தும்.

சவூதி அரேபிய மக்களும், இங்கு வசித்து வரும் வெளிநாட்டவரும் டிரா:.பிக் தொடர்பான கட்டனங்கள் ஏ.டி.எம் மூலமாக செலுத்தலாம். தற்போது அல்ராஜி மற்றும் ரியாத் வங்கிக் கிளைகளில் அல்லது அந்த வங்கிகளின் ஏ.டி.எம் வழியாக மட்டுமே டிரா:.பிக் கட்டனங்களை செலுத்த முடியும். இது மாற்றியமைக்கப்பட்டு கட்டனத்தை கட்டுபவர் எந்த வங்கியின் ஏ.டி.எம் வழியாகவும் கட்டனத்தை செலுத்தும் வண்ணமாக மாற்றியமைக்கப்படும்.

சவூதியிலுள்ள டிரா:.பிக் துறையானது விபத்துக்களை குறைப்பதற்குண்டான அனைத்து யுக்திகளையும் கையாளும். அதுமட்டுமல்லாமல் நவீன தொழில் துறை சாதனங்களைப் பயன்படுத்தி டிரா:.பிக் வரம்பு மீறல்களை கட்டுப்படுத்தும். சவூதி அரேபியாவில் கடந்த 20 ஆண்டுகளில் 20000 பேர் தங்களுடைய உயிரை விபத்துக்களால் தொலைத்திருக்கிறார்கள். சராசரியக வருடத்திற்கு 1000 பேர் விபத்துக்களால் மரணமடைகின்றனர்.

அல்-பிஸர் கூறுகையில், ஹைவேயில் செல்லும் பொழுது வேகத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்துவிட்டதாகக் கூறினார்.

டிரா:.பிக் அதிகாரிகள் அவர்கள் வாகனத்தில் இருந்தபடியே வேகமாகச் செல்லும் வாகனங்களைக் கவனிக்கின்றார்கள். மற்றும் சில இடங்களில் ரேடார் வசதிகளும் பொருத்தப்பட்டுள்ளன. இவை மேலும் அதிகரிக்கப்படும்.

ஒரு கேள்விக்கு பதில் கூறுகையில் ஓட்டுனர்களின் திறமையை அதிகப்படுத்த புதிய நடவடிக்கைகள் டிரைவிங் ஸ்கூல்கள் மூலமாக எடுக்கப்படும் என்றார்.

டிரைவிங் டெஸ்ட் முறைகள் புதுமயமாக்கப்பட்டதையும் கூறினார். இனி டிரைவிங் லைசன்ஸ் எடுப்பவர்களை டிரைவிங் பள்ளி மைதானத்திலிருந்து வெளியில் கொண்டு சென்று பொதுவான சாலைகளில் தேர்வு நடத்தப்படும்.

டிரா:.பிக் அதிகாரிகள் கூறுகையில், லைசன்ஸ் பிளேட் இல்லாமல் இயங்கும் இருசக்கர வாகனங்கள் கண்காணிக்கப்படும் மற்றும் ஹெல்மட் அணியாமல் இருசக்கர வாகனங்களை ஓட்டுவது முற்றிலும் டிரா:.பிக் விதிமுறைகளுக்கு மாற்றமானது ஆகும்

இந்த ஆண்டு இறுதியிலிருந்து புதிய லைசன்ஸ் பிளேட்டுகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. அதில் 3-இலக்க எழுத்துக்களும், 4-இலக்க எண்களும் பொறிக்கப்பட்டிருக்கும். லைசன்ஸ் பிளேட்டுகள் வெவ்வேறு நிறங்களில் இருக்கும். பொதுவான வாகனங்கள், போக்குவரத்து வாகனங்கள், அரசு அதிகாரிகள் வாகனங்கள் ஆகியவைகளுக்கு தனித்தனி நிறங்கள் அளிக்கப்படும்.

அதிகாரிகள் கூறுகையில் பெரிய நகரங்களில் ரகசிய டிரா:. பிக் போலீஸ் வாகனங்கள் அதிகமாக கண்காணிப்பில் இயங்கும்.

***தொகுப்பு : மாலிக் கான். M.Sc***

# அறிவு மற்றும் பரிசுப் போட்டி- 3:5

## போட்டிக்குரிய கேள்விகள்

1. ஒரு முஸ்லிம் தம் சகோதரருடன் இத்தனை நாட்களுக்கு மேல் பேசாமல் இருப்பது அனுமதிக்கப்பட்டதன்று என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

2. திங்கள் மற்றும் எந்த கிழமையில் சுவன வாயில்கள் திறக்கப்படுகின்றன?

3. இஸ்லாமிய வரலாற்றில் மிகப்பெரிய திருப்பத்தை ஏற்படுத்திய முதல் போர் எது?

4. இருவர் தவிர மற்றவர்கள் மீது பொறாமை கொள்ளல் கூடாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் அதில் ஒருவர், குர்ஆனை ஓதி மற்றவருக்கும் கற்றுக் கொடுப்பவர் மற்றொருவர் யார்?

5. ஒளுவில்லாமல் கஃபாவை தவாப் செய்யலாமா?

6. இறைத்தூதர் அவர்களே! நான் அழகிய முறையில் நேசிப்பதற்கு மிகவும் அருகதையானவர் யார்? என்று கேட்டதற்கு தாய் என்று எத்தனை முறை கூறிவிட்டு பிறகு தந்தை என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்?

7. ஒரு கேலன் என்பது எத்தனை லிட்டருக்குச் சமம்?

8. உலகிலேயே மிகப்பெரிய தீபகற்பக நாடு எது?

9. நபி(ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்யும் போது ஸவ்ர் குகையில் நபியுடன் இருந்த மற்றொரு நபித்தோழர் யார்?

10. பிரயாணம் செய்யாமல் நேரத்தில் உள்ளூரில் இருக்கும்பொழுது எத்தனை நாட்களுக்கு காலுறையின் மேல் மஸ்ஹு செய்து கொள்ள அனுமதியுள்ளது.

11. செருப்பை கழட்டும் போது முதலில் எந்த காலை கழட்டவது நபிவழி ஆகும். அவர்கள் கூறினார்கள் - இது அணிவதற்கு மாற்றமானது.

12. பள்ளிவாசலுக்குள் நுழையும் போது ஓதும் துஆ என்ன?

13. எப்போதும் குறை கூறிக்கொண்டே இருப்பவனும், சபிப்பவனும், ஆபாசமாகவும், அற்பமாகவும் பேசுபவனும்- அல்லன் என்று நபி(ஸல்) அவர்கள் யாரைக் கூறினார்கள்.?

14. தங்கம் மற்றும் வெள்ளிப் பாத்திரங்களில் உண்பதும், அருந்துவதும் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதா?

15. திரும்பத் திரும்ப ஓதப்படும் ஏழு ஆயத்துக்கள் கொண்ட அத்தியாயம் எது?

16. தொழுகையில் கொட்டாவி வந்தால் என்ன செய்ய இஸ்லாம் கட்டளையிட்டுள்ளது?

17. ஒடுக்கத்துபுதன் அல்லது சபர்கழிவு இஸ்லாத்தில் அங்கிகரிக்கப்பட்ட வணக்கமா? அல்லது நூதனவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட பித்அத்தா?

18. தேயிலை உற்பத்திக்கு புகழ்பெற்ற நாடு எது?

19. ஒவ்வொரு மனிதருக்குள்ளும் எத்தனை வானவர்கள் இருந்து நன்மை, தீமைகளை எழுதிக் கொண்டிருக்கிறார்கள்?

20. உஹது போரில் உயிர் துறந்த நபி(ஸல்) அவர்களின் பெரிய தந்தையின் பெயர் என்ன?

## விதிமுறைகள்

1. இப்போட்டியில் கலந்து கொள்ள அனைத்து கேள்விகளுக்கும் விடை தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை.

2. கொடுக்கப்பட்டுள்ள 20 கேள்விகளுக்கு அதிக பட்ச மதிப்பெண்கள் அடிப்படையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

3. அதிகபட்ச மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

4. விடைகளை தனித்தாளில் தெளிவாக கேள்வி எண் மற்றும் அதற்குரிய பதிலை எழுத வேண்டும்.

5. விடைத்தாளை உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில்(புதியது) நேரடியாகக் கொடுத்துவிடலாம். தபால் மூலம் அனுப்புவோர்

**Mr. K.L.M. Ibrahim(Madani), Tamil Division,**
**P.O.Box-32628,Jeddah-21438**

அல்லது **suvanam@gmail.com** என்கிற முகவரிக்கு **பிரதி** மாதம் **29**-அல்லது **30**ஆம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பவேண்டும்.

6. நீங்கள் அனுப்பும் உறையில் உங்கள் பெயர் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

7. பரிசு பெற்றவர்கள் விபரம் மற்றும் விடைகள் ஒரு மாதம் விட்டு அடுத்த மாத இதழில் வெளிவரும்.

8. ஆசிரியர் முடிவே இறுதியானது.

## அறிவுப் போட்டி – 3: 3 க்கான விடைகள்

1. அனஸ்(ரலி)
2. ரமலான் நோன்பிற்கு
3. 9 மற்றும் 10
4. சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி, சுப்ஹானல்லாஹில் அளீம்
5. அபீசீனியா
6. சுஹைப் ரூமி
7. பிஸ்மில்லாஹி அவ்வலஹு வ ஆகிரஹு
8. கூடாது.
9. இல்லை.
10. கூடாது.
11. அபூதாலிப்
12. வேண்டாம்
13. நடைபயிற்சி
14. இல்லை
15. இத்தாலி
16. குலா
17. 12
18. சுவர்க்கத்தில் ஒரு மாளிகை
19. நோற்க வேண்டும்.
20. தொழவேண்டாம்

**அறிவுப் போட்டி – 3:3 க்கான பரிசு பெறுபவர் : S.M.M இஸ்முதீன்**

பரிசு பெற்றவர் ***மௌலவி. இப்ராஹீம் மதனி*** அவர்களைத் தொடர்பு கொண்டு பரிசை பெற்றுக்கொள்ளவும் – (050 6625229).